2021-ம் வருடம் பிப்ரவரி மாதம் 05-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

**1.** அரசாணை (நிலை) எண்.**368**, நிதித் (SFC-MC) துறை, நாள்:**07.10.2020**–ன்படி மாநில உயர்மட்டக் குழுவின் நேரடி பார்வையின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவசியமாக தேவைப்படும் அடிப்படை கட்டமைப்புகளுக்கான “ஒரு முறை சிறப்புத் திட்டத்தின் (One Time Special Scheme)” கீழ் ரூ.**46.50** இலட்சம் மதிப்பீட்டில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு சிறுபாலங்கள் கட்டுதல் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| **வ. எ ண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்கள். 2,3,4,6,8,12,13,17,19,20,22,24,25,26,27,29,30,32,33,34,35 மற்றும் 36 ஆகிய வார்டுகளில் உள்ள ஜட்ஜ்மனை 5–வது தெரு, ஜட்ஜ்மனை 3–வது தெரு, பாபுல்லாமக்கான் தெரு,ரேணுகாம்பாள் கோவில் தெரு,கஸ்பா,அ மெயின் ரோடு,நெசவுக்கார 3–வது தெரு,சர்ச் ரோடு,3–வது தார்வழி,கஸ்பா,பி மெயின் ரோடு,புராந்தீன் கொல்லை 3–வது தெரு, ஒ.வி.ரோடு பிள்ளையார் கோவில் தெரு சந்திப்பு, காமராஜர் 1–வது தெரு, புது தெரு, ஜின்னா தெரு, பட்டாணி மூசாமியான் தெரு,கஸ்பா.பி.மெயின் ரோடு மற்றும் பர்ணக்கார 5–வது தெரு சந்திப்பு,பூந்தோட்டம் மசூதி தெரு, பாங்கிபாபுன் கொல்லை தெரு சந்திப்பு, நீலிக்கொல்லை மசூதி தெரு, முகமத்புரா மசூதி 1–வது தெரு, உமர் ரோடு,உமர் ரோடு 3–வது தெரு,பாவேந்தர் தெரு, ஆசனாம்பட்டு ரோடு மெயின் தெரு, மாங்காதோப்பு சுடுகாடுரோடு சந்திப்பு, ரெட்டி தோப்பு4–வது தெரு, ஆசனாம்பட்டு மெயின் ரோடு ( வனத்துறை அலுவலகம் அருகில்),பெத்லகேம் 1–வது தெரு முதல் 7–வது தெரு வரை, பெரியார் 2–வது தெரு, மணிவாசகம் தெரு, லட்சுமி நகர், அன்னைமேரி தெரு, சுந்தர விநாயகர் கோவில் பின்புறம், எஸ்.கே.ரோடு(அட்டை பேக்டரி அருகில்), சாது தெரு,பணக்கார தெரு,சௌராஷ்டிரபுரம் 3–வது தெரு, அண்ணாமலையார் தெரு ஆகிய தெருக்களில் சிறுபாலங்கள் அமைத்தல். | **46.50** |
| | **மொத்தம்** | **46.50** |

<u>அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.</u>
<u>ந.க.எண்.403/இ1/2020</u>
தீர்மான எண்.27:- அனுமதிக்கப்பட்டது.

2. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட கஸ்பா.அ.மெயின் ரோடில் நகராட்சி ஆரம்பப்பள்ளிக்கு எதிரில் உள்ள சிறுபாலமானது மிகவும் பழுதடைந்து உடைந்துள்ளதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் பெருத்த இடையூறாக உள்ளது. எனவே, மேற்படி இடத்தில் புதியதாக சிறுபாலம் அமைக்கவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந,க,எண்.170/இ1/2021
தீர்மான எண்.28:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**3.** ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.28,29,30 மற்றும் 31ஆகிய பகுதிகளில் உள்ள குப்பைகளை தார்வழி பகுதியில் உள்ள நகராட்சி உரகிடங்கிற்கு கொண்டு சென்று தரம் பிரித்து உரம் தயாரிக்கும் பணிகள மேற்கொள்வதில் சிரமமாக உள்ளதால், மேற்படி பகுதிகளில் சேரும்

குப்பகளை தரம் பிரித்து உரம் தயாரிக்க கம்பிக்கொல்லை கானாறு அருகில் உள்ள பகுதியில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும்(OCC) மையம் அமைக்கவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் (ரூபாய்.மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண். 215/இ1/2021

தீர்மான எண். 29:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.32,33 மற்றும் 34ஆகிய பகுதிகளில் உள்ள குப்பைகளை தார்வழி பகுதியில் உள்ள நகராட்சி உரகிடங்கிற்கு கொண்டு சென்று தரம் பிரித்து உரம் தயாரிக்கும் பணிகள மேற்கொள்வதில் சிரமமாக உள்ளதால், மேற்படி பகுதிகளில் சேரும் குப்பகளை தரம் பிரித்து உரம் தயாரிக்க சான்றோர்குப்பம் சாலயில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் அருகில் உள்ள பகுதியில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும்(OCC) மையம் அமைக்கவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் (ரூபாய்.மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண். 215/இ1/2021

தீர்மான எண்.30:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்காக பைப்புகள் புதைக்கவும், வீடுகளுக்கு இணைப்பகள் வழங்கவும் வெட்டப்பட்ட சாலைகளில் கஸ்பா.அ.மெயின் ரோடு, கந்தபொடிகார தெரு, கஸ்பா.அ.சுடுகாடு ரோடு, துத்தப்பட்டு ரோடு (எ) ஜலால் ரோடு, கரும்பூர் படேல் தெரு, ஆசனாம்பட்டு மெயின் ரோடு, கம்பிக்கொல்லை மெயின் ரோடு, கஸ்பா.பி மெயின் ரோடு மற்றும் சின்ன மசூதி தெரு ஆகிய சாலைகள் மிகவும் பழுதடைந்து மேடு பள்ளங்கள் ஏற்பட்டு பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் பெருத்த இடையூறாக உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள சாலைகளில் கிராவல் பரப்பி சமன் செய்யவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோராப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண். 253/இ1/2021

தீர்மான எண்.31:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. ஆம்பூர் நகரமானது 17.97 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். நகரின் மொத்த சாலைகளின் நீளம் 108.600கி.மீ ஆகும். மொத்த வடிகால்வாயிகளின் நீளம் 110.30 கி.மீ. ஆகும். மேற்படி வடிகால்வாய்களில் மண் அதிகமாக சேர்ந்துள்ள காரணத்தால் மழை காலங்களில் மழை நீர் வடிகால்வாய்களில் செல்லாமல் வழிந்தோடி சாலைகளில் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையறூ ஏற்படுவதுடன் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது.மேலும், மழை நீர் பெருக்கெடுத்து தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் புகுந்து விடுகின்றது. எனவே, ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1முதல் 36 வரையில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களில் சேர்ந்துள்ள மண்ணை தூர்வாரி அப்புறப்படுத்த கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பணிகள்

மேற்க்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ. எ. | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை(ரு. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 14 வரையில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களில் சேர்ந்துள்ள மண்ணை தூர்வாரி அப்புறப்படுத்துதல் | 10.00 |
| 2 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 முதல் 36 வரையில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களில் சேர்ந்துள்ள மண்ணை தூர்வாரி அப்புறப்படுத்துதல் | 10.00 |

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண். 1520/இ1/2020

தீர்மான எண்.32:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1முதல் 36 வரையில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களில் சேர்ந்துள்ள மண்ணை தூர்வாரி அப்புறப்படுத்த, இந்நகராட்சியில் 2020-2021 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ்எடுத்துக்கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 18.12.2020-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ. | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை(ரு. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 14 வரையில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களில் சேர்ந்துள்ள மண்ணை தூர்வாரி அப்புறப்படுத்துதல் | 10.00 | 1.எம்.தீனதயாளன்<br>2.எஸ்.அருணாசலம் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br>1.20% மதிப்பீட்டை விட அதிகம் |
| | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 முதல் 36 வரையில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களில் சேர்ந்துள்ள மண்ணை தூர்வாரி அப்புறப்படுத்துதல் | 10.00 | 1.எம்.தீனதயாளன்<br>2.எஸ்.அருணாசலம் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br>1.20% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:- வரிசை எண்.1 மற்றும் 2-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.தீனதயாளன், ஒப்பந்ததாரர் மதிப்பீடடை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண். 1520/இ1/2020

தீர்மான எண்.33:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. இந்நகராட்சியில் வருவாய் நிதியில் எடுத்துக்கொள்ளப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 04.02.2021-ஆம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் ப=ஙணார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட எம்.சி.சாலையான தேசிய நெடுஞ்சாலை சந்திப்பு முதல் பெத்லகேம் இரயில்வே பாலம் வரையில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைக்கவும், மிஷன் காம்பவுண்ட் சாலை மற்றும் இரயில்வே பாலம் அருகில் பாலம் மற்றும் இரும்பு கிரில் அமைத்தல். | 9.40 | 1.எஸ்.அருணாசலம்<br>2. எம்.தீனதயாளன் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு.<br>1.20% மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு:** மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எஸ்.அருணாசலம், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1717/2020/இ1**

தீர்மான எண்.34:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந்நகராட்சிக்கு தேவையான சொத்துவரி குடிநீர் கட்டணம், தொழில் வரி, மற்றும் வரியில்லா இனங்களின் வரி செலுத்தும் கணினி இரசீதுகள், பிறப்பு சான்று படிவங்கள், பதிவேடுகள், இருப்பில் A4 Paper மற்றும் Tonner-கள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் மேற்படி பொருட்களை வடாற்காடு மாவட்ட சிறுதொழில் கூட்டுறவு அச்சகம் விட், வேலூர் (Napco Ltd Vellore) அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.7.00இலட்சத்திற்க்கும், மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**-அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.433/பி3/2018.

தீர்மான எண்.35:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**10.** ஆம்பூர் நகராட்சியில் அம்ருத் திட்டம் **2015–16**இன் கீழ் தொகை ரூபாய். **50.90** கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவருத்தி திட்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.**109** நாள் **29.08.2016**, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு திட்ட பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தினை இந்நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய, ஒப்படைப்பு ஆவணங்ளை நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களது கடிதம் எண் Lr. No. F. Ambur (AMRUT) / JDO/ RWS/ VLR Dt: 27.01.2020 மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குடிநீர் அபிவருத்தி

திட்டத்தினை நகராட்சி வசம் ஏற்றுக் கொள்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு :** ஆம்பூர் நகராட்சியில் அம்ரூத் திட்டம் 2015–2016–ன் கீழ் தொகை ரூ.50.90 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்ட குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை இந்நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ள மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண் 1741/2015/இ2**

தீர்மான எண்.36:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

11. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள விரிவாக்க பகுதிகளிலிருந்து குடியிருப்பு வாசிகள் குடிநீர் இணைப்பு கோரிவருகின்றனர். மேற்கண்ட பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத காரணத்தினால் குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, விரிவாக்க பகுதிகளுக்கு புதியதாக குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணியிணை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 5.00 இலட்சத்திற்க்கு (ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:** 1. அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 70/2021/இ2**

தீர்மான எண்.37:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

12. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் புதியதாக மின்கம்பங்கள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், பழைய மின் கம்பங்களில் உள்ள எண் அழிந்நதுவிட்ட படியாலும் அனைத்து மின்கம்பங்களிலும் புதியதாக கம்பம் எண் எழுதப்பட வேண்டியுள்ளது. எனவே, அனைத்து மின்கம்பங்களிலும் புதியதாக கம்பம் எண் எழுதும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 2.00 இலட்சத்திற்கு மன்ற அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்:1720/2020/இ2**

தீர்மான எண்.38:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**13.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளிலுள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு தனியார் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் வேலூர் அவர்கள் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் திரு.D.நவின்குமார் ஆம்பூர் என்ற ஒப்பந்ததாரர் மூலம் ஆட்கள்பெறபட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தமானது 30.11.2020ம் தேதியுடன் முடிவுபெற்றது. இந்நிலையில் கடந்த மார்ச்–2020 மாதம் முதல் கொரோனா வைரஸ் காய்ச்சல் தொற்று நோய் பரவல் காரணமாக அனைத்து பள்ளிகளும் மூடபட்டது, தாற்போது இந்நோயின் தாக்கம் குறைந்து வருவதால், அரசு வரும் ஜனவரி–2021 முதல் நிபந்தனைகளுக்குட்பட்டு பள்ளிகளை திறக்க உத்தரவு பிறப்பித்துள்ளது. எனவே ஏற்கனவே பணிமேற்கொண்டு வரும் நிறுவனத்தின் மூலம்

மேலும் 1 வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்யவும், மேற்படி பணிக்கு தோராய செலவினத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீாரம் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**மன்றம் அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1296/2018/எச்.1

தீர்மான எண்.39:-அங்கீகரிக்கப்பட்டது.

14. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தேற்றுவித்த துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் 10 ஆகும். வயது முதிர்வு ஓய்வு, மற்றும் இறப்பு காரணமாகவும், தற்போது 5 பணியிடம் காலியிடமாக உள்ளது, சுகாதாரபணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளவும், நுண்ணுர மையம் உரம் தயரித்தல் பணிகளை மேற்கொள்ளவும், இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் 63 தூய்மை பணியாளர்களில் பணிமூப்பு அடிப்படையிலும் மற்றும் கல்வி தகுதி அடிப்படையிலும் தகுதியான தூய்மை பணியாளர்கள் 5 நபர்களை துப்புரவு பணி மேற்பார்வையாளராக பதவி உயர்வின் மூலம் பணியாமர்த்திக் கொள்ளவும் அது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு –**பொது சுகாதார பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை பணிகள் பதிக்காத வண்ணம் காலியாக உள்ள 5 துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்தை தகுதியுள்ள பணியாளர்களை பதவி உயர்வின் மூலம் நியமித்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2406/எச்1/2016

தீர்மான எண்.40:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

15. இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN. 23. AQ 9873 JCB ற்கு புதியதாக கியர் பாக்ஸ் ஒன்று வாங்கும் பணிக்கு 02.12.2020ம் தேதியன்று வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.M.ஜெகதிஸ் குமார் காவியா எர்த் மூவர்ஸ் கஸ்பா–A ஆம்பூர் | JCB வாகனத்திற்கு புதியதாக கியர் பாக்ஸ் ஒன்று வாங்குதல் | ரூ.89000/– |
| 2 | திரு.L.கோவிந்தராஜ் கோவிந்தராஜ் எர்த் மூவர்ஸ் மட்றாப்பள்ளி திருப்பத்தூர். | JCB வாகனத்திற்கு புதியதாக கியர் பாக்ஸ் ஒன்று வாங்குதல் | ரூ.89500/– |

**அலுவலக குறிப்பு:–** (அ) மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.M. ஜெகதிஸ்குமார் காவியா எர்த் மூவர்ஸ் கஸ்பா–A ஆம்பூர் அவர்களின் விலைப்புள்ளியை அங்கீகாரிக்கலாம்.

(ஆ)மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகாரிக்கலாம். அவசரம் அவசியம் கருதி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.1654/எச்1/2020

தீர்மான எண்.41:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

16. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண்.TN83 U3658 டிப்பர்லாரி வாகனம் தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து மராமத்து பணிகளை மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கு தீர்மானம் எண்.54 நாள் 24.06.2020ல் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.மேற்படி பணிக்கு 10.09.2020ம் தேதியில் விலைப்புள்ளி கோரியதில் அரசு ஆங்கீகாரம் பெற்ற நிறுவனமான அசோக்லேலன்ட் பநீலட்சுமி மோட்டார் அசோக்லைலண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளியின் தோரய செலவினத் தொகை ரூ.111371/-ஐ (ரூபாய் ஒரு லட்சத்தி பதினொரயிரத்து முன்னூநூற்று எழுபத்தி ஒன்று) மட்டும், இச்செலவினத்தில் திருவளர் பநீலஷ்மி மோட்டார்ஸ், அசோக்லைலண்ட் நிறுவனம் பழுது நீக்கம் செய்து தகுதி சான்று புதுப்பித்து தர மேற்கண்ட செலவினம் ரூ.111371/-ஐ வேண்டியுள்ளர் எனவே இவ் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதிசான்று புதுபிக்கும் பணிக்கு திருவாளர் பநீலஷ்மி மோட்டார்ஸ் அசோக்லைலண்ட் நிறுவனத்திற்கு மேற்படி பணிகள் மேற்கொள்ள பணிஉத்தரவு வழங்கவும் இப் பணியினை மேற்கொள்ள தோரய செலவினத் தொகை ரூ.111371/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**-(அ) மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்
(அ) மேற்படி பணிக்காகும் தோரய செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகாரிக்கலாம்.
ந.க.எண்.1164/எச்1/2020
தீர்மான எண்.42:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

17. இந்நகராட்சி எல்லகைக்குட்பட்ட நதிசீலாபுரம், ஆசனாம்பட்டு ரோடு பிரதான சாலை, காவலர் குடியிருப்பு பகுதி, பெத்லகேம் பகுதி, எம்.வி.சாமி நகர், கஸ்பா.பி பகுதி ஆகிய பகுதிகளில் மழை காலங்களில் மழை நீர் தேங்கி நின்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் பெருத்த இடையூறாக உள்ளதால் அப்பகுதிகளில் கிராவல் பரப்பி சமன் செய்யவும், எம்.வி.சாமி நகர் முதல் கானாறு வரையில் உள்ள சாலையில் மழை காலங்களில் பெருமளவு மழைநீர் வெள்ளமாக செல்வதால் மழைநீர் செல்ல ஏதுவாக ஜே.சி.பி இயந்திரம் மூலம் தற்காலிக கால்வாய் அமைக்கவும் வேண்டிய அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு:-

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | பணி விவரம் | விலைப்புள்ளி தொகை.ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.அருணாசலம்,ஓப்பந்ததாரர் | 1.Supply and Filling of Well Gravel – 1 Cum | 205/- |
| | | 2.JCB Hire Charghes -1 Hour | 700/- |
| 2 | ஏ.வி.நாகராஜன், ஓப்பந்ததாரர் | 1.Supply and Filling of Well Gravel – 1 Cum | 210/- |
| | | 2.JCB Hire Charghes -1 Hour | 760/- |

மேற்படி பணியினை மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்தில் மேற்கொள்ளவும், இப்பணியினை உடன் மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஓப்பந்ததாரர் திரு. எஸ்.அருணாசலம் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கி மேற்கொண்டதை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- பதிவு செய்யலாம்.
ந.க.எண்.1703/இ1/2020
தீர்மான எண்.43:- பதிவு செய்யப்பட்டது.

18. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு நகராட்சியில் தெருவிளக்கு மின்பணியாளர்கள் போதுமானதாக இல்லாததால் வார்டு எண்.01 முதல் 24 வரையுள்ள பகுதிகளுக்கான தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பராமரிப்பு பணியினை ஏப்ரல் - 2021 முதல் ஜீன் - 2021 வரை தனியார் மூலம் மேற்க்கொள்ள ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரு.9.90 லட்சத்திற்கு (ருபாய் ஒன்பது லட்சத்தி தென்னூறாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.அங்கீகாரம் வழங்கலாம்.
2.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.95/2021/இ2**
தீர்மான எண்.44:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

19. இந்நகராட்சியின் 2020-21-ஆம் ஆண்டு நடப்பு மற்றும் நிலுவை சொத்துவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றின் 36 வார்டுகளுக்கான கேட்பு, வசூல் மற்றும் நிலுவை பதிவேடு (Demand Register) பிரிண்ட் பிரின்ட் எடுத்து பைண்டிங் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ **65,000/–**க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்படி, பணிக்கு 03.02.2021-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர் & மற்றும் முகவரி** | **விலைப்புள்ளி தொகை ரூ** | |
|---|---|---|---|
| | | **பக்கம் ஒன்று பிரிண்ட் எடுக்க** | **புத்தகம் (Register) ஒன்று பைண்டிங் செய்ய** |
| 1 | எஸ். சரவணன்<br>கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், ஆம்பூர். | 2.00 | 50.00 |
| 2. | ஸ்ரீ ஹரி பிரிண்டர்ஸ்,<br>ஆம்பூர். | 2.50 | 60.00 |
| 3. | உமா ஆப்செட் & கிராபிக்ஸ்,<br>ஆம்பூர். | 2.75 | 75.00 |

**அலுவலக குறிப்பு: 1.**மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
2.மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு. திரு.சரவணன், கிங் ஆப்செட் பிரின்டர்ஸ்,என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்: 225/2021/பி2**
தீர்மான எண். 45:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

20. இந்நகராட்சியின் 2020-21-ஆம் ஆண்டு வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி ஆகியவற்றின் ஆண்டு கணக்குகளை தயார் செய்யும் பணிக்கு செய்யும் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ **60,000/–க்கு** அங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்படி, பணிக்கு 03.02.2021-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர் & மற்றும் முகவரி** | **விலைப்புள்ளி தொகை ரூ** |
|---|---|---|
| 1 | Krishna Moorthy,<br>Accounts & Finance consultant,<br>Broad Bazaar,Amvur | 59,500.00 |
| 2. | Saravana Accounts & Finance consultancy services,<br>V.A. Kareem Road,Ambur | 61,000.00 |
| 3. | Rajendira Prasad,<br>Accounts consultancy services,<br>Nethaji Road,<br>Ambur | 62,000.00 |

**<u>அலுவலக குறிப்பு: 1.</u>**மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

2. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு. கிருஷ்ண மூர்த்தி,, என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 217/2021/பி2**

தீர்மான எண்.46:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி